முருகப்பெருமான் துணை

**மகான் பீர்முகமது அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.08.2023**, சனிக்கிழமை

1. வரம் தரும் ஞான குருவே
வள்ளலே ஆறுமுக அவதாரமே
அறம் போற்றும் தேசிகனே
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது நள்ளி திங்கள்
குறைவிலா இருபான் திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 20 ம் நாள், 05.08.2023, சனிக்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் கேட்க பீர்முகமது யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை ஞான வழிகாட்டும்
ஞானமாம் அரங்கன் வழியை
நல்கி மக்கள் பற்றிவருக
4. வருகவே வையகம் தன்னில்
வளரும் சன்மார்க்கம் தானும்
பெருமைதரும் ஞானிகள் பூசை
பிசகின்றி மக்கள் செய்திட
5. செய்திட பேருலகில் ஞானிகள்
செயல்வடிவமாக இறங்கி
மெய்யறிவுத் தருவதுடன் உலகில்
மேலான அன்னதான சேவையும்
6. சேவையும் வளர்த்து நன்கு
செப்பிடுவேன் கலியுக மக்களை
அவனியில் தருமவான்களாக்கி
அற்புதம் நடக்கும் அரங்கன் ஆசிபட

7. ஆசி தீட்சை அருளும் ஞானி
அரங்கன் சூட்சும பலமறிய
வாசிவசம் சர்வமும் விளங்கி
வாழும் காலமே ஞானிகளாவர்

8. அவனியிலே மேல்நிலை பெற
அனைத்து பேதநிலை கடந்து
புவனத்தில் இனமத பேதமின்றி
புகலுவேன் அனைத்துவகை இணக்கமும்

9. இணக்கமும் கூடி ஓர்மைபட
எல்லோரும் சமமெனக் கருதி
வணக்கமுடன் எங்கும் தருமம்
வளர்த்துமே இப்புவி தருமலோகம் ஆகும்

10. ஆகவே கலியினில் அரங்கன்
அவதாரம் மக்களால் அறியப்பட்டு
யுகமாற்றம் நிகழக் கூடும்
உண்மையானவர்கள் ஞானவான்கள்

11. இவர்களெல்லாம் அரசியல் களம்
இணையிலா ஆன்மீக களமாக
அவனியில் முனைய மாற்றமதும்
ஆறுமுகனார் ஆளுமையாக மாறும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—